**செ.வெ.எண்: 37 / மார்ச் /2020** **நாள்: 13.03.2020**

திருச்சி வீட்டு வசதிப் பிரிவு, திருச்சி வீட்டு வசதிப் பிரிவுக்குப்பட்ட திட்டப்பகுதிகளில் உள்ள விற்பனை செய்யப்படாமல் உள்ள வீடுகள்,மனைகள் குலுக்கல் மூலம் விற்பனை செய்ய பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு, வருகின்ற 20.03.2020 அன்று குலுக்கல் ஒதுக்கீடு குழு கூட்டம் திருச்சி காஜாமலைக் காலனி மாநகராட்சி சமுதாய கூடத்தில் நடைபெறவுள்ளது என செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் திரு.இரா.மனோகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**

**செ.வெ.எண்: 38 / மார்ச் /2020** **நாள்: 13.03.2020**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு, அரசு வழங்கிய வட்டித் தள்ளுபடி திட்டம் 31.03.2020 அன்று முடிவடைய இருப்பதால் தங்களது ஒதுக்கீட்டிற்கான நிலுவைத் தொகையினை, ஒரே தவணையில் செலுத்தி விற்பனைப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம் என தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய செயற்பொறியாளர் திரு.இரா.மனோகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

---------------

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் குடியிருப்பு அலகுகள் ஒதுக்கீடு பெற்றவர்களில், வட்டிச் சுமையினால் விற்பனைப் பத்திரம் பெற்றிடாமல் உள்ளவர்களுக்கு, மாதத் தவனை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி, முதலாக்கத்தின் மீதான வட்டி ஆகியன முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியில், வருடத்திற்கு 5 மாத வட்டி மட்டும் கணக்கிட்டு தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது. அரசால் வழங்கப்பட்ட இச்சலுகை எதிர்வரும் 31.03.2020 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும். வட்டித் தள்ளுபடி திட்டத்திற்கு தகுதியான ஒதுக்கீடுதாரர்களுக்கு, ஏற்கனவே நிலுவைத் தொகைக்கான தாக்கீது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, தகுதியான ஒதுக்கீடுதாரர்கள், இந்த பொன்னான வாய்ப்பினை பயன்படுத்தி, சம்மந்தப்பட்ட அலுவலகங்களை அணுகி, தங்களது ஒதுக்கீட்டிற்கான நிலுவைத் தொகையினை, ஒரே தவணையில் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. 31.02.2020க்குப் பின்னர், நிலுவைத் தொகையினை செலுத்தும் ஒதுக்கீடுதாரர்களுக்கு, மேற்படி வட்டித் தள்ளுபடி சலுகை கிடைக்கப் பெறாது என்பதால், இந்த அறிய வாய்ப்பினை தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் திரு.இரா.மனோகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.**